ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
අති විශෙෂ
இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை
அதி விசேஷமானது
අංක 2053/40 - 2018 ජනවාරි මස 11 වැනි බ්‍රහස්පතින්දා - 2018.01.11
*2053/40 ஆம் இலக்கம் - 2018 ஆம் ஆண்டு சனவரி மாதம் 11 ஆந் திகதி வியாழக்கிழமை*
(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (I)- பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

*ச. வ. பி. 21/ 1978* (X)

### *1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, பல்கலைக்கழகங்கள் சட்டம்*

25அ என்னும் பிரிவின் கீழான கட்டளை

*1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, பல்கலைக்கழகங்கள் சட்டத்தின் 25அ என்னும் பிரிவினால் எனக்குரித்தாக்கப்பட்டுள்ள தத்துவங்களின் பயனைக்கொண்டு, உயர் கல்வி மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சர் லக்ஷ்மன் கிரியெல்ல ஆகிய நான், 2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க, கம்பனிகள் சட்டத்தின் கீழ் இலங்கையில் கூட்டிணைக்கப்பட்ட கம்பனியொன்றாகவுள்ளதும், பீபி 4833 என்னும் பதிவிலக்கத்தைக் கொண்டதுமான நஷனல் ஸ்கூல் ஒப் பிஸ்னஸ் மனேஜ்மன்ட் லிமிட்டெட் தொடர்பில், மேற்சொல்லப்பட்ட சட்டத்தின் 70இ என்னும் பிரிவின் கீழ் அறிக்கையொன்றைப் பெற்றுக்கொண்டு சொல்லப்பட்ட சட்டத்தின் கீழ் ஆக்கப்பட்டதும், 2016, யூலை 14 ஆந் திகதிய 1975/48 ஆம் இலக்க அதி விசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டதுமான கட்டளைக்கான அட்டவணையை, இதற்கான அட்டவணை I இல் குறித்துரைக்கப்பட்ட நிபந்தனைகளுக்கமைய, அதன் அட்டவணை II இல் முறையே நிரல் I இலும் நிரல் II இலுமுள்ள அதன் நேரொத்த பதிவிலும் காணப்படுகின்ற "கணக்கியல் மற்றும் நிதியில் கௌரவ முகாமைத்துவ இளமாணி" என்னும் பதிவை உடனடுத்துப் பின்னர் இதற்கான அட்டவணை II இல் முறையே நிரல் I மற்றும் நிரல் II இன் கீழ் குறித்துரைக்கப்பட்ட பதிவுகளைச் சேர்ப்பதன் மூலம் இக்கட்டளையால் திருத்துகின்றேன் :-*

**அட்டவணை** I

நிபந்தனைகள்

நஷனல் ஸ்கூல் ஒப் பிஸ்னஸ் மனேஜ்மன்ட் லிமிட்டெட் ஆனது, இதற்கான அட்டவணை II இல் குறித்துரைக்கப்பட்ட பட்ட நிகழ்ச்சித்திட்டத்துக்காக மாணவர்களைச் சேர்க்கும் போது கணினி முறைமைப் பொறியியலில் கௌரவ விஞ்ஞானமாணி தொடர்பில், க. பொ. த. உயர்தரப் பரீட்சையில் ஒரே தடவையில் பௌதிக விஞ்ஞானத்துறையில் மூன்று (03) "S" சித்திகள் அல்லது அதற்குச் சமமான குறைந்தபட்ச நுழைவுத் தகைமைகளுக்கு அமைந்தொழுகுதல் வேண்டும்.

**அட்டவணை** II

| *நிரல் I* | *நிரல் II* |
|---|---|
| பட்டம் | பட்டத்துக்கான சுருக்கீடு |
| கணினி முறைமைப் பொறியியலில் கௌரவ விஞ்ஞானமாணி | பிஎஸ்சி கௌரவ (கணினி முறைமைப் பொறியியல்) |

லக்ஷ்மன் கிரியெல்ல,
உயர் கல்வி மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சர்.

கொழும்பு,
*2018, சனவரி 10.*

*1 - 743*

1A - PG 3868 — 507 (2018/01) இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.
*இவ் அதி விசேட வர்த்தமானியை* www.documents.gov.lk *என்னும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*